ஈரோடு மாவட்டம் கலிங்கியம் ஊராட்சி கோபிசெட்டிபாளையம் வட்டாரம்

## கலிங்கியம் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.T.கோகிலா அருள்இராமச்சந்திரா B.Com..,அவர்கள்

பொருள் : மனைப்பிரிவு அனுமதி-கலிங்கியம் ஊராட்சி , கலிங்கியம் "ஆ" கிராமம் - புல எண்கள் : 363/2A4 ல் 40.25 ஏக்கர் பரப்பில் (உத்தேச) குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் அனுப்பப்பட்டது - ஒப்புதல் வழங்கப்பட்டது - மனைப்பிரிவுகள் விற்பனை செய்ய உள்ளாட்சித் தீர்மானம் மூலம் அனுமதி வழங்கி உத்திரவிடுதல் - சார்பாக.

பார்வை : 1) குமார் என்பவரின் விண்ணப்பம் 24.10.2023
2) கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள் : 3059/2022 நாள் : 14.11.2023.
3) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) ஈரோடு மண்டலம் அவர்களின் ந.க.எண் : ROC NO IUY8JJZZ/2023/TCP, நாள் : 17.10.2023
4) இவ்ஊராட்சி மன்ற தீர்மான எண் : 229/2023 நாள் : 27.10.2023.

******

உத்திரவு

ஈரோடு மாவட்டம் , கோபிசெட்டிபாளையம் வட்டம் , கலிங்கியம் ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட கலிங்கியம் "ஆ" கிராமம் புல எண் : 363/2A4 ல் 40.25 ஏக்கர் பரப்பளவில் பார்வை 1ல் காணும் குமார்என்பவரின் விண்ணப்பத்தின் பேரில் பார்வை 2ல் காணும் கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களின் படி மேற்படி விண்ணப்பதாரால் மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் , பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடத்தை கலிங்கியம் ஊராட்சி தலைவர் பெயருக்கு தானப்பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) , ஈரோடு மண்டலம் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் வழங்கி மனைப்பிரிவிற்கு DTCP அங்கீகார எண்: 415/2023 என எண்ணிட்ட வரைபடம் நிபந்தனைகளுடன் தீர்மானத்தில் 07 மனையிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 4ல் காணும் இவ்ஊராட்சி மன்ற தீர்மானத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) ஈரோடு மண்டலம் அவர்களால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) , ஈரோடு மண்டலம் அவர்கள் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு "ஸ்ரீ சக்தி சாய் நகர் PHASE-I" என்னும் பெயரிடப்பட்ட 07 மனையிடங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு : 1) நிபந்தனைகள்
2) வரைபடம்-1

பெறுதல் :

குமார்.

நகல் :

1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) , ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2) சார்பதிவாளர் , கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு தகவலுக்காக

தலைவர்,
கலிங்கியம் ஊராட்சி,
கலிங்கியம்.